2015 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரமில்லாத குற்றச்சாட்டை இந்த அவையில் கூறியிருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக் குறிப்பில் ஏறவில்லை. திரு. துரைமுருகன் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறவில்லை. (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. அ. சவுந்தரராசன் சொல்லுங்கள். (குறுக்கீடு) இருங்கள், நான் அனுமதித்திருக்கிறேன் அல்லவா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசட்டும். ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய பிறகு நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

(இ) வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் காரில் மோதி ஒருவர் மரணம்

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22–3–2015 அன்று வேலூர் மாவட்டம், கார்ணம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. உதயசூரியன் என்பவர் அதே கிராமத்தைச் சேர்ந்த தனது நண்பர் திரு. ராஜ்குமார் என்பவருடன் இரு சக்கர வாகனத்தில் காட்பாடி–சென்னை சாலையில் தங்கள் கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது, இரவு சுமார் 9–30 மணியளவில் எதிர்பாராத விதமாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த கார் ஒன்றின்மீது மோதியதில் தானும், வாகனத்தை ஓட்டிய திரு. ராஜ்குமாரும் கீழே விழுந்ததில் காயங்கள் ஏற்பட்டதாகவும், திரு. ராஜ்குமார் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், தான் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், காட்பாடி காவல் துறையினரிடம் அளித்த புகாரின்பேரில் காட்பாடி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையில், சம்பவத்தன்று திரு. ராஜ்குமாருக்கு துணி எடுக்க இருவரும் அன்று மாலையில் இரு சக்கர வாகனத்தில் காட்பாடி சென்று, பின்னர் அவர்கள் இரவு சுமார் 9–30

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 மார்ச் 30

மணியளவில் தங்கள் கிராமத்தை நோக்கி இருவரும் இரு சக்கர வாகனத்தில் திரும்பியுள்ளனர். அப்போது, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது அரசு வாகனத்தில் வாகன ஓட்டுநர் திரு. மோகன் வாகனத்தை ஓட்ட, தனது உதவியாளர்கள் இருவருடன் வேலூர் நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போது கார்ணம்பட்டு கிராமத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த திரு. ராஜ்குமாரின் இரு சக்கர வாகனம் மாவட்ட ஆட்சியரின் கார்மீது மோதியுள்ளது. இதில் திரு. ராஜ்குமார் காயமடைந்து சம்பவ இடத்தில் இறந்துள்ளார். பின்னால் அமர்ந்திருந்த திரு. உதயசூரியனுக்குக் காயங்கள் ஏற்பட்டுள்ளன. உடனடியாக மாவட்ட ஆட்சியர் விபத்து குறித்து மாவட்டத் தனிப் பிரிவு காவல் ஆய்வாளருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

இதற்கிடையில், தகவல் அறிந்து காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்துள்ளனர். காயமடைந்த திரு. உதயசூரியனை உடனடியாக வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ்மூலம் அனுப்பி வைத்ததுடன், இறந்த திரு. ராஜ்குமாரின் பிரேதத்தை மற்றோர் ஆம்புலன்ஸ்மூலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கிருந்து வேலூர் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இறந்த திரு. ராஜ்குமாரும், காயமடைந்த திரு. உதயசூரியனும் விபத்து நடந்தபோது குடிபோதையில் இருந்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. இவ்வழக்கில், 23–3–2015 அன்று திரு. ராஜ்குமாரின் பிரேதம் வேலூர் அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர், பிரேதத்தை அவரது பெற்றோர் பெற்றுக்கொண்டனர். திரு. ராஜ்குமாரின் தாயார் வளர்மதி கார்ணம்பட்டு கிராம பஞ்சாயத்துத் தலைவியாக இருந்து வருகிறார்.

இந்நிலையில், துக்க நிகழ்ச்சியில் கலந்துகொள்ள கார்ணம்பட்டு சென்ற தி.மு.க.–வைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைமுருகன் மற்றும் தி.மு.க.–வினர் மாவட்ட ஆட்சியரின் வாகன ஓட்டுநரைக் கைது செய்யக் கோரி திடீரென கார்ணம்பட்டு இரயில்வே மேம்பாலத்தின்மீது சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். தகவலறிந்த காவல் துறையினர் சம்பவ இடத்திற்குச் சென்றவுடன் அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்று, பின்னர் காட்பாடி– வேலூர் சாலையில் சித்தூர் பேருந்து நிறுத்தம் அருகில் சாலை

மறியலில் ஈடுபட்டனர். காவல் துறையினர் புலன் விசாரணை அடிப்படையில் ஓட்டுநர்மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியதன்பேரில் அவர்கள் கலைந்து சென்றனர்.

தி.மு.க.–வினர் இரண்டு இடங்களில் சாலை மறியல் செய்து, போக்குவரத்திற்குத் தடை ஏற்படுத்தியதற்காக திருவலம் மற்றும் காட்பாடி காவல் நிலையங்களில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழக்குகள் புலன் விசாரணையில் இருந்து வருகின்றன. சாலை விபத்து குறித்த வழக்கின் புலன் விசாரணை அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–50

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சிறிது நேரம் இருங்கள். உங்களைப் பேச அனுமதியளிக்கிறேன். டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் பேசுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொம்பன் திரைப்படத்தில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் இல்லை. எல்லா* subject *பற்றியும் பேசுவதற்கு அனுமதியில்லை. திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அது பற்றி அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். பார்த்துவிட்டுச் சொல்கிறேன், உட்காருங்கள்.*

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பொறியாளர், முத்துக்குமாரசாமி அவர்கள். .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது* C.B.C.I.D. *விசாரணையில் இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது* C.B.C.I.D. *விசாரணையில் இருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எம். ஆறுமுகம், என்னவென்று சொல்லுங்கள்.*